## தலைப்பு 293 – இறப்பர் அபிவிருத்தி திணைக்களம்

---

### 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இறப்பர் அபிவிருத்தி திணைக்களத்தின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் இறப்பர் அபிவிருத்தி திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2021 ஆகஸ்ட் 03 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் திணைக்களத்திற்குரிய விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2021 செப்டம்பர் 21 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இறப்பர் அபிவிருத்தி திணைக்களத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்புக்கள்

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக

ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் / கணக்கீட்டு உத்தியோகத்தரினது பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் திணைக்களத்தால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் / கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

---

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு திணைக்களத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாக உள்ளது எனவும்,

(ஆ) இந்த அறிக்கையின் 1.6.2(அ) மற்றும் 1.6.2(ஆ) ஆம் பந்திகளின் அவதானிப்புக்கள் தொடர்பாக முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது அறிக்கையில் குகறிப்பிடப்பட்ட பரிந்துரைகள் மீளாய்வாண்டின் போதும் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 நிதிச் செயலாற்றல் கூற்று

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பரீட்சை மீதியின் பிரகாரம் ஆண்டின் ஏனைய பெறுவனவுகள் ரூபா 346,625,662 ஆக இருந்த போதிலும், நிதிச் செயலாற்றல் கூற்றின் பிரகாரம் அப்பெறுவனவுகள் ரூபா 346,962,149 ஆனமையால் ரூபா 336,487 தொகையான வேறுபாடு அவதானிக்கப்பட்டது. | பரீட்சை மீதியின் பிரகாரம் வருமானம் அல்லாத பெறுவனவுகள் ரூபா 346,962,149 ஆகும். அது செயலாற்றல் கூற்றின் பிரகாரம் சரியானதாகும். | வேறுபாட்டிற்கான காரணங்களை கண்டறிந்து சரிசெய்தல் வேண்டும். |

### 1.6.2 பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணிச்செல்லப்படாமை

----------------------------------------------------------------------------------------------------

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நிதிப் பிரமாணம் 891(i) இன் பிரகாரம் பிணை வைக்க வேண்டிய உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்களின் தகவல்களை உள்ளடக்கிய பிணைப் பதிவேடொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | இந்த பதிவேடுகள் மற்றும் புத்தகங்களை முறையாகவும் நாளதுவரையாகவும் பேணிச் செல்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என தயவுடன் குறிப்பிடுகின்றோம். | பிணை வைக்க வேண்டிய உத்தியோகத்தர்கள் தொடர்பாக பிணைப் பதிவேடொன்று பேணப்பட வேண்டும். |
| (ஆ) | நிதிப் பிரமாணம் 110 இன் பிரகாரம் இழப்பு நட்ட பதிவேடு பேணிச் செல்லப்பட்டிருக்க வில்லை. | இந்த பதிவேடுகள் மற்றும் புத்தகங்களை முறையாகவும் நாளதுவரையாகவும் பேணிச் செல்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என தயவுடன் குறிப்பிடுகின்றோம். | நிதிப் பிரமாணம் 110 இன் ஏற்பாடுகளின் பிரகாரம் அதன் கீழ் வருகின்ற மாதிரி படிவத்தின் பிரகாரம் இழப்பு தொடர்பான பதிவேடொன்று பேணிச் செல்லப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 செலவின முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 03 மீண்டெழும் செலவின விடயங்களுக்குரிய ரூபா 14,500,000 தொகையான தேறிய நிதி ஏற்பாட்டு தொகையில் மீளாய்வாண்டின் போது ரூபா 8,692,131 தொகை அதாவது, தேறிய நிதி | 2020 ஆம் ஆண்டின் மார்ச் மாதம் முதல் கொரோனா தொற்றுநோய் நிலைமையின் காரணமாக பல்வேறு வரையரைகளுடன் அலுவலக | வழங்கப்பட்டுள்ள பிரகாரம் நிதி ஏற்பாடுகளை செயற்திறனாக பயன்படுத்துதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | ஏற்பாட்டு தொகையில் 85 சதவீதத்திற்கும் 28 சதவீதத்திற்கும் இடையிலான சதவீதம் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. | நடவடிக்கைகளை கொண்டுசெல்ல வேண்டி ஏற்பட்டிருந்தது. அதன் காரணமாக அலுவலக செயற்பாடுகளுக்காக செலவாகின்ற மீண்டெழும் செலவினங்கள் குறைந்த மட்டத்தில் பேணிச் செல்லக் கூடியதாக இருந்தமையினால் ஏற்பட்ட சேமிப்பாகும். | |
| (ஆ) | 293-2-1-2507 ஆம் இலக்க (ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி) மூலதன செலவின விடயத்திற்காக ஒதுக்கப்பட்ட ரூபா 15,000,000 நிதி ஏற்பாட்டு தொகையில் மீளாய்வாண்டின் போது ரூபா 5,589,294 தொகை பயன்படுத்தப்படாதிருந்தது டன், அது நிதி ஏற்பாடு செய்யப்பட்ட தொகையில் 37 சதவீதமாக இருந்தது. | நாட்டில் காணப்பட்ட தொற்று நோய் நிலைமையின் இடையே நாடு மூடப்பட்டமை மற்றும் நடமாட்டத்தை வரையறுக்கும் சட்டதிட்டங்களுக்கு இடையிலும் ரூபா 9,410,706.35 செலவினம் ஒன்றைச் செய்து 2507 செலவின விடயத்தின் கீழ் வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்ட பணிகளில் 62.7 சதவீதமான நிதி செயல் முன்னேற்றம் பெறப்பட்டிருந்தமையை தயவுடன் குறிப்பிடுகின்றோம். | மூலதன செலவின விடயங்களுக்காக ஒதுக்கப்பட்ட நிதி ஏற்பாட்டை பயன்படுத்துவதற்காக வருடத்தின் ஆரம்பம் முதல் செயல் நடவடிக்கைத் திட்டத்திற்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 2.2 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் தாபன விதிக் கோவை XIX ஆம் அத்தியாயத்தின் 6.2 ஆம் பிரிவின் பிரகாரம் உத்தியோகபூர்வ இல்லங்களில் குடியிருக்கின்ற உத்தியோகத்தர்கள் ஓய்வு பெற்றுச் செல்லும் போது அந்த உத்தியோகபூர்வ இல்லங்களில் இருந்து விலகிச் செல்லுதல் வேண்டும். எனினும் இரத்தினபுரி மற்றும் களுத்துறை மாவட்டங்களில் இரண்டு உத்தியோகபூர்வ இல்லங்களில் குடியிருந்த இறப்பர் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் இருவர் முறையே 2017 யூன் மற்றும் 2015 திசெம்பர் 13 ஆம் திகதி முதல் ஓய்வுபெற்றுச் சென்றிருந்த போதும் மீளாய்வாண்டு வரையிலும் அந்த உத்தியோகபூர்வ இல்லங்களில் இருந்து விலகி மீண்டும் கையளிப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | இரத்தினபுரி (கெட்டஹெத்த உத்தியோகபூர்வ இல்லம்) மற்றும் களுத்துறை (மத்துகம உத்தியோகபூர்வ இல்லம்) மாவட்டங்களில் ஓய்வுபெற்றுச் சென்றதன் பின்னர் உத்தியோகபூர்வ இல்லங்களில் குடியிருக்கின்ற ஓய்வூபெற்ற இறப்பர் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் அந்த இல்லங்களில் இருந்து அகற்றுவதற்கு சட்ட ரீதியான நடவடிக்கைகள் எடுக்கும் போது அந்த காணிகளின் உரித்து திணைக்களத்திற்கு சொந்தமாக இல்லாதிருந்தமை பிரச்சினையாக இருந்தது. தற்போது கெட்டஹெத்த உத்தியோகபூர்வ இல்லம் அமைந்துள்ள காணி பிரதேச செயலாளரினால் திணைக்களத்திற்கு கையளிக்கப்பட்டுள்ளது. அதனால் வழக்கு தொடரும் நடவடிக்கைகளுக்காக அமைச்சின் சட்ட உத்தியோகத்தர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளது. | உத்தியோகபூர்வ இல்லங்களில் குடியிருக்கின்ற உத்தியோகத்தர்கள் ஓய்வு பெற்றுச் செல்வதற்கு முன்னர் உத்தியோகபூர்வ இல்லங்களை கையளிப்பதற்கு தேவையான சகல நடவடிக்கைகளும் எடுக்கப்பட வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

-----------------------------------

### 3.1 பணிப்பொறுப்புக்கள் நிறைவேற்றப்படாமை

----------------------------------------------------------------------

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| இறப்பர் அபிவிருத்தி திணைக்களத்தினால் நாட்டில் இறப்பர் பயிர் செய்யப்பட்டுள்ள மொத்த காணி தொடர்பான புள்ளிவிபரங்கள் பேணிச்செல்லப்பட வேண்டியிருந்ததுடன், மீளய்வாண்டில் அதற்காக ரூபா 5,000,000 நிதி ஏற்பாடு ஒதுக்கப்பட்டிருந்த போதிலும், அந்த பணிகள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. | நாடு முழுவதும் பல சந்தர்ப்பங்களின் போது நாட்டை மூடவேண்டி ஏற்பட்டிருந்த கொவிட் தொற்று நோய் நிலைமையின் காரணமாக எழுந்த நடமாட்டத் தடை மற்றும் தனிமைப்படுத்தல் சட்டங்களின் காரணமாக உரிய செயற்பாடுகளை மேற்கொள்வதற்கு முடியாதிருந்ததை தயவுடன் குறிப்பிடுகின்றோம். | இறப்பர் பயிர் செய்யப்பட்டுள்ள மொத்த காணி அளவு தொடர்பாக சரியான புள்ளிவிபரங்கள் பேணிச்செல்லப்பட வேண்டும். |

### 3.2 எதிர்பார்த்த பூர்த்தி மட்டம் பெற்றுக்கொள்ளப்படாமை

-----------------------------------------------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) மீளாய்வாண்டின் போது சிறு இறப்பர் தோட்ட உரிமையாளர்கள் மற்றும் பெருந்தோட்ட கம்பனிகளில் இருந்து முறையே 512 ஹெக்டேயர் மற்றும் 820 ஹெக்டேயர் காணி அளவில் இறப்பர் மீள்நடுகைக்கு எதிர்பார்க்கப்பட்ட போதிலும், அதில் மீள்நடுகை 456 | சிறு இறப்பர் தோட்ட இலக்கிடப்பட்ட அளவில் 456.68 ஹெக்டேயரிலும் தோட்ட கம்பனிகள் அந்த இலக்கிடப்பட்ட அளவில் 498.73 ஹெக்டேயரிலும் ஆக கன்றுகள் நட்டியிருந்தமையும், அதன் பிரகாரம் நிறைவேற்றப்பட்ட அளவு திட்டமிடப்பட்ட அளவில் முறையே 87 சதவீதம் 60 | இறப்பர் மீள் நடுகை இலக்குகளை பூர்த்தி செய்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | ஹெக்டேயர் காணியிலும், 499 ஹெக்டேயர் காணியிலும் மாத்திரம் பயிரிடப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் நிறைவேற்ற முடியாத அளவு முறையே திட்டமிடப்பட்ட அளவில் 10 சதவீதம் மற்றும் 40 சதவீதமாக இருந்தது. | சதவீதமாக இருந்தது. | |
| (ஆ) | திணைக்களத்தினால் மீளாய்வாண்டில் மானியத்தின் கீழ் 15 மாவட்டங்களில் 260 ஹெக்டேயர் காணியில் புதிய பயிர்ச்செய்கைக்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும், 190 ஹெக்டேயர் காணி அளவில் மாத்திரம் பயிர் செய்யப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் நிறைவேற்றப்படாத அளவு திட்டமிடப்பட்ட அளவில் 26 சதவீதமாக இருந்தது. | 2020 ஆம் ஆண்டில் கொரோனா தொற்று நோய் நாடு முழுவதும் பரவிய பாதகமான நிலைமையின் காரணமாக வழங்கப்பட்டிருந்த மீள் நடுகை மற்றும் புதிய பயிர்ச்செய்கை இலக்கிடப்பட்ட நில அளவில் திட்டமிடப்பட்ட பிரகாரம் உரிய சதவீதத்தை அடைந்து கொள்வதற்கு முடியாதிருந்தமையை தயவுடன் அறியத்தருகின்றோம். | இறப்பர் புதிய பயிர்ச்செய்கைத் திட்டம் பூர்த்தி செய்யப்படல் வேண்டும். |
| (இ) | சிறு தோட்ட பிரிவினால் இறப்பர் மீள் நடுகை மானிய திட்டத்தின் கீழ் மீள் நடுகைக்காக 771 ஹெக்டேயர் காணிக்காக 966 பயிர்ச்செய்கையாளர்களுக்கு அனுமதிப் பத்திரம் விநியோகிக்கப்பட்டிருந்த போதும், 456 ஹெக்டேயர் காணிக்கு அனுமதிப்பத்திரம் பெற்றவர்களில் 640 பேர்கள் மாத்திரம் மீள் நடுகை மேற்கொண்டிருந்தனர். அதன் பிரகாரம் அனுமதிப் பத்திரம் விநியோகிக்கப்பட்ட அளவில் 33 சதவீதம் பயிர்ச்செய்கை மேற்கொண்டிருக்கவில்லை. | -மேற்படி- | திட்டமிடப்பட்ட இலக்கை அடைந்து கொள்ளல் வேண்டும். |

**3.3 அரசாங்க உத்தியோகத்தர்களின் பிணை வைத்தல்**

---

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| நிதிப் பிரமாணம் 880(i) இன் கீழ் காண்பிக்கப்பட்டுள்ள தொகுதிகளுக்குரிய உத்தியோகத்தர்களின் எண்ணிக்கையை இனங்கண்டு பிணை வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பிணை வைக்க வேண்டிய உத்தியோகத்தர்களின் ஒருபகுதியினர் பிணை வைத்திருந்ததுடன் ஏனைய உத்தியோகத்தர்களிடம் இருந்து பிணை வைக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது என அறியத்தருகின்றோம். | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் பிணை வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**3.4 நட்டம் மற்றும் இழப்பு**

---

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| திணைக்களத்திற்கு சொந்தமான 08 வாகனங்களுக்கு உரியதாக ஏற்பட்டிருந்த விபத்துக்களின் காரணமாக மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு இழப்பின் மொத்த பெறுமதி ரூபா 2,466,640 ஆக இருந்ததுடன், இந்த நட்டத்தை இதுவரை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | எமது திணைக்களத்திற்கு சொந்தமான வாகனங்களுக்கு இடையே விபத்துக்கு உட்பட்டமையின் காரணமாக ஏற்பட்டுள்ள நட்டம் தொடர்பாக தற்போது சில வாகனங்களுக்கு சட்ட ரீதியான நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்படாதிருந்ததுடன், நிதிப் பிரமாண பரிசோதனையின் பிரகாரம் மிகுதி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என அறியத்தருகின்றோம். | வாகனங்களுக்கான நட்டத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 3.5 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| இறப்பர் அபிவிருத்தி திணைக்களத்திற்கு கட்டிடமொன்றை நிர்மாணிப்பதற்காக 2009 ஆம் ஆண்டின் போது 75 பேர்ச் ரூபா 66,700,000 பெறுமதியில் காணியொன்றை கொள்வனவு செய்வதற்கு நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு ரூபா 59,304,347 தொகை செலுத்தப்பட்டிருந்தது. அவ்வாறு அந்த காணியில் கட்டிடத்தை நிர்மாணிப்பதற்கும், திட்டத்தை தயாரிப்பதற்கும் கட்டிட திணைக்களத்திற்கு ரூபா 150,000 தொகை 2009 ஆம் ஆண்டின் போது செலுத்தப்பட்டு ரூபா 249 மில்லியன் மதிப்பீடொன்றும் தயாரிக்கப்பட்டிருந்தது. இதன் ஆரம்ப நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டு 11 வருடங்கள் அளவிலான காலம் கடந்திருந்த போதிலும், நிலுவை பணத்தை செலுத்தி திணைக்களத்திற்கு காணியை கையேற்கும் நடவடிக்கைகள் மற்றும் காணியில் நிர்மாண நடவடிக்கைகள் என்பன இதுவரை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. 2017 பெப்ரவரி மாதம் முதல் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் திணைக்களம் வாடகைக்குப் பெற்ற தனியார் கட்டிடம் ஒன்றில் நடாத்திச் செல்லப்பட்டிருந்தது. | நகர அபிவிருத்தி அதிகார சபையில் இருந்து கொள்வனவு செய்யப்பட்ட காணியை முறையாக கையேற்பதற்கு 2019 ஆம் ஆண்டின் போது நடவடிக்கை எடுக்கப்பட்டதுடன், அதன் பிரகாரம் 2020.08.28 ஆம் திகதி நகர அபிவிருத்தி அதிகார சபையினால் காணியை கையளிப்பதற்கு பிரதேச செயலாளருக்கு அனுப்பப்பட்டிருந்தது. பிரதேச செயலகத்தினால் காணி பரீட்சிக்கப்பட்டு அளவிடல் நடவடிக்கைகளுக்காக நில அளவையாளர் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டிருந்தது. காணி அளவிடப்பட்டு கையளிக்கப்பட்டதன் பின்னர் கட்டிடத்தை நிர்மாணிக்கும் நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது என்பதை தயவுடன் குறிப்பிடுகின்றோம். | காணி கையேற்கும் நடவடிக்கைகள் மற்றும் கட்டிடத்தை நிர்மாணிக்கும் நடவடிக்கைகள் தாமதமின்றி நிறைவேற்றப்பட வேண்டும். |

## 3.6 முகாமைத்துவ நலிவுகள்

-------------------------------------------
பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இறப்பர் மீள் நடுகை மற்றும் புதிய பயிர்ச்செய்கை மானிய திட்டத்தின் கீழ் 9 மாவட்டங்களில் இறப்பர் பயிர்ச்செய்கை மானியம் வழங்கப்பட்ட 9,398 பயிர்ச்செய்கையாளர்களில் 603 பேர் பயிர்ச்செய்கையை கைவிட்டிருந்தமையினால் ரூபா 21,702,451 தொகை திணைக்களத்திற்கு அறவிட வேண்டியிருந்தது. | இறப்பர் பயிர் செய்கையாளருக்கு செலுத்தப்பட்ட மானிய பணத்தை அறவிடல் தொடர்பாக திட்டமுறைமையொன்று திணைக்களத்திடம் தற்போது காணப்படாதிருந்த போதும் இறப்பர் மீள் நடுகை ஆலோசனை சபையை மீண்டும் செயற்படுத்துவதன் ஊடாக மானிய பணத்தை அறவிடுதல் தொடர்பாக திணைக்களம் கவனம் செலுத்தியுள்ளது என்பதை அறியத்தருகின்றோம். | இறப்பர் பயிர்ச்செய்கை மானியத்தை பெற்று பயிர்ச்செய்கைகளை கைவிட்ட பயிரச் செய்கையாளர்களிடம் இருந்து அறவிட வேண்டிய பணத்தை தாமதமின்றி அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | திணைக்களத்திற்கு சொந்தமான 77 உத்தியோகபூர்வ இல்லங்களில் 11 உத்தியோகபூர்வ இல்லங்கள் பழுதுபார்க்கக்கூடிய நிலையில் காணப்பட்டதுடன், அந்த உத்தியோகபூர்வ இல்லங்கள் 13 வருட காலம் பயன்படுத்தப்படாமல் காணப்பட்டது. அவ்வாறே 23 உத்தியோகபூர்வ இல்லங்கள் உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்படாமல் அலுவலகமாக நடத்திச் செல்லப்பட்டிருந்தது. | உரிய ஆண்டில் மேற்கொள்ளப்பட வேண்டியது எவை இனங்காணப்பட்டு திருத்த நடவடிக்கைகளுக்காக போதியளவான நிதி ஏற்பாடு கிடைக்கப் பெறாமையின் காரணமாக 06 மாதங்கள் முதல் 13 வருடங்களுக்கு இடையில் இந்த பழுதுபார்த்தல்கள் தாமதடைந்திருந்தமையினால் அவை பயன்படுத்தப்படாமல் காணப்பட்டதையும் குறிப்பிடுகின்றோம். | உத்தியோகபூர்வ இல்லங்களை பழுதுபார்த்தல் மேற்கொண்டு உத்தியோகத்தர்களின் பயன்பாட்டிற்கு வழங்குவதற்கு நடடிவக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 4. மனித வள முகாமைத்துவம்

-----------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு திணைக்களத்தில் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் 478 ஆக இருந்ததுடன், அதில் 96 பதவிகளில் வெற்றிடங்கள் காணப்பட்டன. அந்த வெற்றிடங்களுக்கு இடையே இலங்கை நிர்வாக சேவையின் பணிப்பாளர் பதவிகள் 05 உம், கணக்காளர் பதவிகள் 02 உம் வெற்றிடமாக காணப்பட்டன. | நிர்வாக சேவையின் 05 பணிப்பாளர் பதவிகள் முழுநேர பதிற்கடமை அடிப்படையில் சேவையாற்றுவதற்கு அரசாங்க சேவை ஆணைக்குழுவின் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. | சேவையின் தேவையினை கவனத்தில் கொண்டு வெற்றிடங்கள் நிரப்பப்பட வேண்டும். |
| (ஆ) | திணைக்களத்தின் செயற்பாட்டு நடவடிக்கைகளுக்கு நேரடியாக பங்களிக்கின்ற சிரேஷ்ட இறப்பர் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் 10 பேரும், இறப்பர் அபிவிருத்தி உத்தியோகத்தர் 50 பேரும் வெற்றிடமாக காணப்பட்டமை செயற்திட்ட நடவடிக்கைகளின் இலக்கை அடைந்து கொள்வதில் பின்னடைந்தமைக்கு தாக்கமளித்திருந்தமை அவதானிக்கப்பட்டது. | சிரேஷ்ட இறப்பர் அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் வெற்றிடங்கள் 10 ஐயும், இறப்பர் அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் வெற்றிடங்கள் 50 ஐயும் ஆட்சேர்த்து கொள்வதற்கான அங்கீகாரம் கோரி அரசாங்க சேவை ஆணைக்குழுவிற்கும், அமைச்சின் செயலாளருக்கும் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன், அந்த அங்கீகாரம் கிடைத்த பின்னர் இந்த வெற்றிடங்களுக்கான உத்தியோகத்தர்கள் 2021 ஆம் ஆண்டின் போது சேர்த்துக்கொள்வதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது. | -மேற்படி- |